**ணமழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 16.04.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை மாதம் 03ஆம் நாள் **16.04.2018 திங்கள்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய (கர்னல் ஜான் பென்னி குவிக்) தரைத்தளம் பகுதியில் உள்ள தெற்கு பக்கம் மெயின் பிளாக உள்ள இரு சக்கர வாகன குத்தகை உரிமம் நாள் 12.04.2018-ம் தேதி நடைபெற்ற பொதுஏல ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஏலக்கேள்வி |
|---|---|---|---|
| 1. | A. தமிழ்ச்செல்வி,<br>க/பெ.அழகுராஜா,<br>கிழக்கு தெரு மெய்யனபட்டி,<br>உசிலம்பட்டி தாலூகா,<br>சீமானூத்து, மேக்கிலார்பட்டி.<br><br>9865718222 | ரூ.8,01,000/- | -- |

**அலுவலகக்குறிப்பு** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட இனத்திற்கு யாரும் ஏலம் கேட்க முன் வரவில்லை. எனவே மேற்கண்ட ஏலக்கேள்வியை அனுமதித்து திருமதி.A.தமிழ்ச்செல்வி என்பவர்க்கு உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 487 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 02</u>:**

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய டி.வி.எஸ்.சாலையில் உள்ள ஆண்கள் கட்டண கழிப்பறை வசூல் செய்யும்குத்தகை உரிமமம நாள் 11.04.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்ட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஏலக்கேள்வி |
|---|---|---|---|
| 1. | திரு.K.சிவசந்திரன்,<br>த/பெ.கோட்டைச்சாமித்தேவர்,<br>குப்பிநாயக்கன்பட்டி.,<br>மெயின் ரோடு,<br>தேனி மாவட்டம். | ரூ.36,000/- | -- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட இனத்திற்கு 11 முறைக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி பொது ஏலம் கோரப்பட்டு ஏலக்கேள்வி கேட்க முன் வரவில்லை. எனவே நகராட்சி நிதியினை கருத்தில் கொண்டு மேற்க்கண்ட ஏலக்கேள்வியை அனுமதித்து திரு.K.சிவசந்திரன் என்பவர்க்கு உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 488 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 03</u>:**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து முனையத்தில் உள்ள ஆண்டுக் குத்தகை இனங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் **01.04.2018**–ம் தேதி முதல் **31.03.2021**–ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை விடுவது தொடர்பான அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அலுவலகத்தின் மூலமாக மாலைமுரசு நாளிதழில் **22.02.2018**–ம் தேதியில் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்ட செய்தித்தாள் விளம்பர கட்டணமாக ரூ.**24476/**–ஐ வழங்கக்கோரி மாலைமுரசு நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி விபரத்திற்கு விளம்பரக்கட்டணமாக ரூ.**24476/**–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**5647/2015**/அ3)

**<u>தீர்மான எண். 489 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 04</u>:**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து முனையத்தில் உள்ள ஆண்டுக்குத்தகை இனங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் **01.04.2018**–ம் தேதி முதல் **31.03.2021**–ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை விடுவது தொடர்பான அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அலுவலகத்தின் மூலமாக மக்கள் குரல் நாளிதழில் **19.02.2018**–ம் தேதியில் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்ட செய்தித்தாள் விளம்பர கட்டணமாக ரூ.**43822**/–ஐ வழங்கக்கோரி மக்கள் குரல்நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி விபரத்திற்கு விளம்பரக்கட்டணமாக ரூ.**43822**/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2015/அ3)

**<u>தீர்மான எண். 490 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 05</u>:**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து முனையத்தில் உள்ள ஆண்டுக்குத்தகை இனங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் **01.04.2018**–ம் தேதி முதல் **31.03.2021**ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை விடுவது தொடர்பான அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அலுவலகத்தின் மூலமாக தினசூரியன் குரல் நாளிதழில் **19.03.2018**–ம் தேதியில் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்ட செய்தித்தாள் விளம்பர கட்டணமாக ரூ.**20166**/–ஐ வழங்கக்கோரி தினசூரியன் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி விபரத்திற்கு விளம்பரக்கட்டணமாக ரூ.**20166**/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2015/அ3)

**<u>தீர்மான எண். 491 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 06</u>:**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து முனையத்தில் உள்ள ஆண்டுக்குத்தகை இனங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் **01.04.2018**–ம் தேதி முதல் **31.03.2021**–ம் தேதி வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை விடுவது தொடர்பான அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அலுவலகத்தின் மூலமாக தினபூமி நாளிதழில் **27.07.2017**–ம் தேதியில் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்ட செய்தித்தாள் விளம்பர கட்டணமாக ரூ.**30795**/–ஐ வழங்கக்கோரி தினபூமி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி விபரத்திற்கு விளம்பரக்கட்டணமாக ரூ.**30795**/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2015/அ3)

**<u>தீர்மான எண். 492 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி குன்னூர் குடிநீர்த்திட்டம் மற்றும் என்.ஆர்.டி.நகர் பூஸ்டர் மோட்டார்கள் பழுது பணி செய்து பராமரித்தல் பணிக்கு ரூ.9.80 (ரூ. ஒன்பது லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.481நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 11.04.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மாணிக்கம் | 7,25,460.00 | 1.28% குறைவு |
| 2 | திரு.டி.தவமணி | 7,28,760.00 | 0.83% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.எஸ்.மாணிக்கம் 0.83% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1170/2018/இ2)

**<u>தீர்மான எண். 492 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி பழனிசெட்டிபட்டி நீரேற்று நிலைய மோட்டார்கள் வால்வுகள் மற்றும் கேபிள்கள் பழுது பணி செய்து பராமரித்தல் பணிக்கு ரூ.9.80 (ரூ. ஒன்பது லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.484 நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 11.04.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மாணிக்கம் | 8,60,665.00 | 0.34% கூடுதல் |
| 2 | திரு.டி.தவமணி | 8,56,250.00 | 0.85% குறைவு |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தவமணி 0.85% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1171/2018/இ2)

**தீர்மான எண். 493 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள மினிபவர்பம்ப் மற்றும் கைப்பம்புகள் பழுது பணி செய்து பராமரித்தல் பணிக்கு ரூ.9.80 (ரூ. ஒன்பது லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.485 நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 11.04.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மாணிக்கம் | 8,49,120.00 | 0.29% குறைவு |
| 2 | திரு. டி.தவமணி | 8,58,920.00 | 0.85% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.எஸ்.மாணிக்கம் 0.29% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1172/2018/இ2)

**தீர்மான எண். 494 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 10:

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.1 முதல் 16 வரை உள்ள மினிபவர்பம்ப் மற்றும் கைப்பம்புகள் பழுது பணி செய்து பராமரித்தல் பணிக்கு ரூ.9.80 (ரூ. ஒன்பது லட்சத்தி எண்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.482 நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 11.04.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எ ஸ்.மாணிக்கம் | 8,63,628.00 | 1.23% அதிகம் |
| 2 | திரு. டி.தவமணி | 8,50,030.00 | 0.36% குறைவு |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தவமணி 0.36% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1168/2018/இ2)

**தீர்மான எண். 496 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 11:

தேனி - அல்லிநகரம் நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் நீர்கசிவு சீர் செய்து பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.9.00 (ரூ. ஒன்பது லட்சம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.483 நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 11.04.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.ஏ.சிராஜீதின் | 7,68,770.00 | 0.40% குறைவு |
| 2 | திரு.ஏ.சம்சுதின் | 7,75,130.00 | 0.42% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.எம்.ஏ.சிராஜீதின் 0.40% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1169/2018/இ2)

**தீர்மான எண். 497 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 12:

தேனி - அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடம் புதிய பேருந்து நிலையம் கழிப்பறைகள் மின் மயானம் உயர் கோபுர மின்விளக்குகளுக்கு தேவையான மின் உபகரணப் பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.1.20 (ரூ. ஒரு லட்சத்தி இருபதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.476 நாள் 27.03.2018-ல் மேற்படி பணிக்கு 15.03.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பி.முருகேசன் | 1,05,905.32 | 0.01% குறைவு |
| 2 | திரு.எம்.முகமது சலீம் | 1,07,285.00 | 1.30% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.பி.முருகேசன் 0.01% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1173/2018/இ2)

**<u>தீர்மான எண். 498 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 13</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி 2017-2018-ம் ஆ ண்ண் பொது நிதியின் கீழ் பாதாளச்சாக்கடை திட்ட கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீர் உந்து ஆய்வுத் தொட்டிகள் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | பட்டியல் எண். | விளம்பரம் விபரம் | பட்டியல் தொகை (ரூபாய்) | வருமானவரி பிடித்தம் (ரூபாய்) | காசோலைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | AAA/1169/2017/18<br>நாள் 06.03.2018 | பாதாளச்சாக்கடை திட்ட கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீர்உந்து ஆய்வுத் தொட்டிகள் தனியார் மூலம் (முதலாம் ஆண்டு) பராமரிப்பு மேற்கொள்ள | ரூ.277673.00 | ரூ.5553.00 | ரூ.272120.00 |

எனவே, மேற்கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1173/2018/இ2)

**<u>தீர்மான எண். 499 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 14</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஜெட்ராடிங் வாகனம் விநியோகம் செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிழல்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Accord advertising agencies, சென்னை (The New Indian Express மற்றும் நமது புரட்சித்தலைவி அம்மா) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை. வெளியீட்டு ஆணை எண்: 1201/ ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 20-03-2018. | ரூ: 70,088/- |
| | | **மொத்தம்** | **ரூ: 70,088/-** |

மேற்கண்ட தொகை ரூ:70,088/- (ரூபாய்: எழுபது ஆயிரத்து என்பத்து எட்டு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 163 / 2018 / இ1)

**<u>தீர்மான எண். 500 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பிரதான நுழைவாயிலிருந்து தெற்கு பகுதி உணவகம் அருகில் 18 x 47.8 என்ற அளவில் உபயோகப் படுத்தப்படாத காலியிடம் உள்ளது. மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே பொதுசுகாதார வார்டு அலுவலகம் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது பயன்பாடற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட நகராட்சி வருவாயினை ஏற்படுத்தும் பொருட்டு சுற்றுக்கட்டிடம் உள்ள இடத்தினை அடிப்படையில் மாத வடகைக்கு கடை வைத்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>மன்றத்தீர்மான எண். 501 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் நுழைவு வாயில் வடக்கு பகுதி ஆவின் பாலகம் அருகில் 15 ½ x 11 ½ என்ற அளவில் காலியிடம் உள்ளது. அதனை அருகிலுள்ள கடைகள் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர். அவ்வப்போது எச்சரிக்கும் போது பயன்படுத்துவதை நிறுத்தி விட்டு பின்னர் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். எதிர் காலத்தில் மேற்கண்ட இடத்தை ஆக்கிரமிப்பு ஏற்படாதவாறு நகராட்சி வருவாயை பெருக்கும் நோக்கத்தோடு தரை வவடகை அடிப்படையில் மாத வாடகைக்கு கடை வைத்து கொள்ள பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்ன்த்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.5647/2018/அ3)

**மன்றத்தீர்மான எண். 502 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:32.23 லட்சம் மதிப்பீட்டில் தேனி- அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் உந்து நிலையம், கழிவுநீர் ஆய்வு தொட்டி மற்றும் கழிவுநீர் குழாய்கள் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 23656/2013/DO1, நாள்: 06-02-2018-ல் அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 09-03-2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியுடைய ஒப்பந்ததாரரின் விலைவிகத உறை 19-03-2018 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) |
|---|---|---|
| 1 | V.V.V. Constructions, Chennai | ரூ: 37,72,199.28 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் தகுதியுடைய V.V.V. Constructions, Chennai நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தினை குறைத்துதர கோரியதில், கீழ்கண்டவாறு விலைகுறைப்பு செய்திட சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | பேரப்பேச்சுவார்த்தைக்கு பின் குறைக்கப்பட்ட ஒப்பந்த தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | V.V.V. Constructions, Chennai | ரூ: 33,82,860.80 |

தற்போது நகராட்சியில் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு பாதாள சாக்கடை திட்டத்தினை உரிய முறையில் பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி M/s.V.V.V. Constructions, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) நகராட்சியில் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு பாதாள சாக்கடை திட்டத்தினை உரிய முறையில் பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி, மேற்கண்ட பணிக்கு வரப்பபெற்ற இரண்டு ஒப்பந்பதபுள்ளியில் குறைவான விலை கோரியுள்ள M/s.V.V.V. Constructions, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண். 503 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 18</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:537.72 லட்சம் மதிப்பீட்டில் தேனி- அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் உந்து நிலையம், கழிவுநீர் ஆய்வு தொட்டி மற்றும் கழிவுநீர் குழாய்கள் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்: 4212/UGSS-1/2018, நாள்: 19-02-2018-ல் அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 04-04-2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியுடைய ஒப்பந்ததாரரின் விலைவிகத உறை 12-04-2018 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) | ஓப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்) | கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Ujwala Infratech (India) Pvt. Ltd., Tirupati | ரூ: 5,37,72,108.14 | ரூ: 5,74,22,186.99 | 6.79 % கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகதம் கோரியுள்ள M/s.Ujwala Infratech (India) Pvt. Ltd., Tirupati நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தினை குறைத்துதர கோரியதில், ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையிலிருந்து 1.70 சதவீதம் குறைத்து கொடுத்து 4.97 சதவீதம் கூடுதலான விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள சம்மதக் கடிதம் கொடுத்துள்ளதுார் மேலும் மேற்கொண்டு விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) | பேரப்பேச்சுவார்த்தைக்கு பின் குறைக்கப்பட்டு ஒப்பந்த தொகை (ரூபாய்) | கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Ujwala Infratech (India) Pvt. Ltd., Tirupati | ரூ: 5,37,72,108.14 | ரூ: 5,64,45,355.67 | 4.97 % கூடுதல் |

தற்போது நகராட்சியில் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு பாதாள சாக்கடை திட்டத்தினை உரிய முறையில் பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதியும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி M/s. Ujwala Infratech (India) Pvt. Ltd., Tirupati நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பபெற்ற இரண்டு ஒப்பந்பதபுள்ளியில் குறைவான விலை கோரியுள்ள M/s. Ujwala Infratech (India) Pvt. Ltd., Tirupati நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், தற்போது நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு, உடனடியாக பாதாள சாக்கடை இணைப்புகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதியும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 504 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 19:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 13899/2016/DO1 நாள்: 21-07-2017 அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 06-09-2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்ட நான்கு நிறுவனங்களுக்கும் போதிய தொழில்நுட்ப தகுதிகள் இல்லாத காரணத்தால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்பட்டன.

மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக M/s.KSP Electricals, தேனி நிறுவனத்தின் சார்பாக தொடரப்பட்ட வழக்கு எண்: W.P.(MD) No. 17271/2017 நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு தற்போது பணியாளர்கள் மட்டும் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்பட்டு நகராட்சியால் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 19-03-2018-ம் தேதிய திரு.ஹேம கார்த்திகேயன், வழக்கறிஞர் அவர்களின் கடிதத்தில் தெருவிளக்கு தனியார்மயம் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட நிலையில் மேற்கண்ட பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சியால் முடிவு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்கண்ட விபரங்களை கருத்தில் கொண்டும் பொது மக்கள் நலன் கருதி நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு மேற்கொள்ளும் பொருட்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 163/ 2017 / இ2)

**மன்றத்தீர்மான எண். 505 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 20:

தேனி – அல்லிநகரம் நகராட்சி ஆற்றங்கரை பகுதியில் பொது மக்கள் கொட்டக்குடி ஆற்றில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு சென்று வரும் பொருட்டு படிக்கட்டுகள் அமைத்தல் மற்றும் கோட்டைக்களம் மற்றும் குறிஞ்சி நகர் குறுக்குத் தெருக்களில் தேசமடைந்த சிறுபாலங்கள் சீரமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.10 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி ஆற்றங்கரை பகுதியில் கொட்டக்குடி ஆற்றில் படிக்கட்டுகள் அமைத்தல் மற்றும் கோட்டைக்களம் மற்றும் குறிஞ்சி நகர் குறுக்குத் தெருக்களில் தேசமடைந்த சிறுபாலங்கள் சீரமைத்தல் | 1.10 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: / 2017 / இ1)

**மன்றத்தீர்மான எண். 506 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 23 என்.ஆர்.டி பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக மழை காலங்களில் மழைநீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்குவதால் பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட மழைநீர் வடிகாலினை உடனடியாக சீரமைக்க வேண்டியது இன்றியமையானதாக உள்ளது. எனவே தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 23 என்.ஆர்.டி. நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.70 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 23 என்.ஆர்.டி. நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 1.70 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: / 2017 / இ1)

**மன்றத்தீர்மான எண். 507 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 29 உள்ள சுப்பன் தெருவில் பூக்கடை தெருவிற்கு கிழக்குப்புறமுள்ள குறுக்குச் சாலையில் மழை காலங்களில் மழைநீர் செல்ல இயலாத நிலையில் சாலையில் மழைநீர் தேங்கி பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியிலிருந்து சுப்பன் தெரு வழியாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.80 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து என்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:29 சுப்பன் தெரு பூக்கடை தெருவிற்கு கிழக்குப்புறமுள்ள குறுக்குச் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.80 |

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: / 2017 / இ1)

**மன்றத்தீர்மான எண். 508 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 23:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அல்லிநகரம் நகராட்சி பள்ளியில் பள்ளியில் உள்ள வகுப்பறை கட்டடங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள மின்பணிகள் சீரமைத்தல் மற்றும் வகுப்பறையில் அலமாரிகள் அமைத்தல் மற்றும் விளையாட்டு மைதானத்தில் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியது இன்றயமையானதாகும். எனவே அல்லிநகரம் நகராட்சி பள்ளி வகுப்பறையில் மின் பணிகள் மேற்கொள்ளுதல், அலமாரிகள் அமைத்தல் மற்றும் விளையாட்டு மைதானம் மேம்பாடு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.50 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அல்லிநகரம் நகராட்சி பள்ளி வகுப்பறையில் மின் பணிகள் மேற்கொள்ளுதல், அலமாரிகள் அமைத்தல் மற்றும் விளையாட்டு மைதானம் மேம்பாடு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.50 |

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: / 2017 / இ1)

**மன்றத்தீர்மான எண். 509 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு சாக்கடை கால்வாய்க்ள், கழிப்பறைகள் (கோவில்கள்) வழிபாட்டுத்தளங்கள் ஆகியவற்றில் உள்ள கிருமிநாசிகளை அழிப்பதற்கு பிரிச்சிங் பவுடர் பயன்படத்தப்பட்டு வருகிறது. மேலும் டெங்குபாய்ச்சல் தடுப்பு பணிக்கு கொசுப்புழுக்களை அழிப்பதற்கு வீடு வீடாக சென்று தொட்டிகளில் பிளிச்சிங் பவுடர் பயன்படத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் பிளிச்சிங் பவுடர் குறைவாக இருப்பதால் மேற்படி

பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் 2000 கிலோ தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டஸ்ட்ரியஸ் கோ-ஆப் சர்வீஸ் திருச்சி நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு மேறக்காணும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2961/2017/எச்1)

**மன்றத்தீர்மான எண். 510 1,2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 25:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் ஆய்வு செய்து மின்சார சேமிப்பு விளக்குகளாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மண்டல அளவில் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொண்டதற்கான தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கான பங்களிப்பு தொகையாக ரூ: 5,95,296/- (ரூபாய்: ஐந்து லட்சத்து தொன்னூற்று ஐந்து ஆயிரத்து இருநூற்று தொன்னூற்று ஆறு மட்டும்) செலுத்திட கோரி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மதுரை அவர்களின் ந.க.எண்: 2380/2017/பி3 நாள்: 12-03-2018 தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் ஆய்வு செய்ததற்கான நகராட்சி பங்களிப்பு தொகையாக ரூ: 5,95,296/- நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மதுரை அவர்களுக்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) நகராட்சி பங்களிப்பு தொகை ரூ: 5,95,296/- செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் : 1208 / 2017 / இ2)

**மன்றத்தீர்மான எண். 511 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி.